# மற்றவர்களை சேவித்தல்

Transcribed from a message spoken in April, 2012 in Chennai

By *R.S.Milton*

“எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான். உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான். இவன் உங்களுக்காகவும், லவோதிக்கேயருக்காகவும், எராப்போலியருக்காகவும், மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கிறானென்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன்” *(கொலோ. 4:12-13).*

“இன்னவிதமாய் எங்களைப் பின்பற்ற வேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே! நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும், ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டோம். உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதனாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்க வேண்டுமென்றே அப்படிச் செய்தோம்” *(2 தெச. 3:7-9).*

“சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்” *(1 பேதுரு 5:3).*

“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும்..” *(எபேசியர் 1:17).*

“ஆவியானவர் : நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார். அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான்” *(அப். 8:29-30).*

## தேவனுடைய ஒரேவொரு வேலை

நாம் வாசித்த வசனங்களுக்கிடையே என்ன தொடர்பு இருக்கிறது என்று தோன்றக்கூடும். பேசும்போது இந்த வசனங்களுக்கிடையே உள்ள தொடர்பை நாம் புரிந்துகொள்வோம். இந்த முழுப் பிரபஞ்சத்திலும் தேவன் ஒரேவொரு வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறார். அது என்னவென்றால், இந்த முழுப் பிரபஞ்சத்தையும் கிறிஸ்துவைக்கொண்டு நிரப்புவது. அதை அவர் எங்கு தொடங்குகிறார் என்றால் தம் பிள்ளைகளைக் கிறிஸ்துவால் நிரப்புவதில் தொடங்கி இந்த முழுப் பிரபஞ்சத்தையும் கிறிஸ்துவால் நிரப்புகிறார்.

மத்தேயு 3ஆம் அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்று கரையேறும்போது வானத்திலிருந்து ஒரு சத்தமுண்டாகி, “இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் (அல்லது) இவரில் பூரிப்படைகிறேன்” என்று கூறிற்று. இந்தப் பிரபஞ்சத்தில் பிதாவாகிய தேவனைப் பிரியப்படுத்துகிற அல்லது பூரிப்படையச் செய்கிற ஒரேவொரு காரியம் என்னவென்று கேட்டால் அது அவருடைய குமாரனாகிய கிறிஸ்து. இந்தப் பிரபஞ்சத்தில் கிறிஸ்துவைத் தவிர வேறொன்றும் பிதாவினுடைய இருதயத்தைப் பூரிப்பாக்குவதில்லை. இந்த யுகத்தின் முடிவிலே தேவன் இந்தப் பிரபஞ்சத்தில் ஒன்றேவொன்றைத்தான் பார்க்க விரும்புகிறார். எதை? கிறிஸ்துவைப் பார்க்க விரும்புகிறார். அவர் நம்மேல் பிரியமாயிருக்கிறார், நம்மேல் பூரிப்படைகிறார். ஏன்? ஏனென்றால், நம்மில் கிறிஸ்து இருக்கிறார். நாம் தேவனுக்கு மிகவும் பிரியமானவர்கள். அதற்கு என்ன காரணம் என்றால் கிறிஸ்து நம்மில் இருக்கிறார். நாம் கிறிஸ்துவைக் கொண்டுள்ள பாத்திரங்களாக இருக்கிறோம்.

ஒவ்வொரு நாளும் இந்தப் பூமியிலே அல்லது இந்தப் பிரபஞ்சத்திலே தேவன் ஒரேவொரு காரியத்தைத்தான் செய்துகொண்டிருக்கிறார். கிறிஸ்துவை அவர் நிரப்பிக்கொண்டேயிருக்கிறார் அல்லது கிறிஸ்துவை அதிகரித்துக்கொண்டேயிருக்கிறார் அல்லது கிறிஸ்துவை பெருக்கிக் கொண்டேயிருக்கிறார். அதே விகிதத்திற்கு கிறிஸ்துவல்லாத எல்லாவற்றையும் அவர் குறைத்துக் கொண்டேயிருக்கிறார் அல்லது நீக்கிக்கொண்டேயிருக்கிறார். இதைப் பிரபஞ்சத்திலே செய்கிறார் என்றால் அனுபவத்தில் நம்முடைய வாழ்க்கையிலே செய்து கொண்டிருக்கிறார் என்று பொருள். பிரபஞ்சத்திலே

செய்துகொண்டிருக்கிறார் என்றால் நெப்டியூனைத் தாண்டி எங்கோ ஓர் இடத்தில் செய்து கொண் டிருக்கிறார் என்பதல்ல இதன் பொருள். அவர் கிறிஸ்துவை நிரப்புகிற வேலை நம்மிலே ஆரம்பிக் கிறது. நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே தொடங்குங் காலமாயிருக்கிறது என்பதுபோல கிறிஸ் துவை நிரப்புகிற வேலை நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலே ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு நாளும் அவர் கிறிஸ்துவைக்கொண்டு நம்மை நிரப்புகிறார். கிறிஸ்துவல்லாத பல காரியங்கள் நம் வாழ்க்கையில் இருக்கின்றன. கிறிஸ்துவைக் கூட்டவும் செய்கிறார். கிறிஸ்துவல்லாத ஏதோ வொன்றை ஒவ்வொரு நாளும் நம் வாழ்க்கையில் குறைக்கவும் செய்கிறார்.

## சிலுவையும், உயிர்த்தெழுதலும்

சகோதரர்கள் பகிர்ந்துகொண்டதுபோல் சில சமயங்களில் அவர் நம் வாழ்க்கையில் பிரமிக்கத்தக்க வகையில் எதையாவது செய்யக்கூடும். கிறிஸ்துவைக் கூட்டுகிற வேலையை...எடுத்துக்காட்டாக ஒருவர் வியாதிப் படுக்கையில் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். “மருத்துவர்கள் என்னைக் கைவிட்டார்கள். அந்த நேரத்தில் கிறிஸ்துவை என் ஆரோக்கியமாக, மருத்துவராகக் கண்டுகொண் டேன். ஆண்டவரை எப்படி நம்புவது என்று நான் கற்றுக்கொண்டேன்,” என்று சொல்லுகிறார். இது கிறிஸ்து ஒரு மனிதனுக்குள் பெருகுவது. இது ரொம்ப பிரமிக்கத்தக்கது.

ஆனால், நம்முடைய வாழ்க்கையில் 90 சதவிகிதம் திரும்பத் திரும்பச் செய்கிற காரியமாகத்தான் இருக்கிறது. நாம் கேட்டதுபோல் திரும்பத் திரும்ப நாம் செய்துகொண்டிருக்கிற ஒரே காரியத்திலும் தேவன் கிறிஸ்துவைச் சிறிதுசிறிதாக நமக்குள் கூட்டிக்கொண்டிருக்கிறார். அதே அளவுக்கு கிறிஸ்து வல்லாத ஏதோவொன்றைச் சிறிதுசிறிதாக நம்மிலிருந்து குறைத்துக்கொண்டிருக்கிறார். அதைச் செய்வதற்குப் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சிலுவையையும், கிறிஸ்துவின் உயிர்த் தெழுதலையும் பயன்படுத்துகிறார். கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைப் பயன்படுத்தி கிறிஸ்துவல் லாத காரியங்களை நம் வாழ்க்கையிலிருந்து நீக்கிக்கொண்டேயிருப்பார். கிறிஸ்துவின் உயிர்த்தெழு தலிலே அவருக்குரிய காரியங்களை நமக்குள் சேர்த்துக்கொண்டேயிருப்பார்.

## வாழ்வின் இலக்கு

நம்முடைய வாழ்க்கையின் முடிவிலுங்கூட ஒன்றேவொன்றுதான் காரியம். எந்த அளவுக்குக் கிறிஸ்து எனக்குள் கூட்டிச் சேர்க்கப்பட்டிருக்கிறார். இது முதல் காரியம். இரண்டாவது காரியம், கிறிஸ்து மற்றவர்களுக்குள் கூட்டிச்சேர்க்கப்பட நான் எந்த அளவுக்கு ஒரு வாய்க்காலாக இருந்தேன் அல்லது ஒரு பாத்திரமாக இருந்தேன். இந்த இரண்டையும் தவிர தேவனுக்கு வேறு எதிலும் ஈடுபாடு இல்லை என்று நான் வேதத்தை வாசித்ததிலிருந்து புரிந்துகொள்கிறேன். எந்த அளவுக்குக் கிறிஸ்து எனக்குள் பெருகியிருக்கிறார். கிறிஸ்து மற்றவர்களுக்குள் பெருகுவதற்கு நான் எந்ந அளவுக்கு ஒரு வாய்க்காலாக அல்லது பாத்திரமாக இருந்தேன். முதல் காரியமாக இருந்தாலும் சரி, இரண்டாவது காரியமாக இருந்தாலும் சரி, முடிவு ஒன்றுதான். கிறிஸ்து இந்தப் பூமியில் பெருகுவது, அதிகரிப் பது, விருத்தியாவது. இது தேவனுடைய இருதயத்தின் விருப்பம். இதுவரை கிறிஸ்துவல்லாத ஒரு நபருக்குள் நம்மூலம் இப்போது கிறிஸ்து போயிருக்கலாம். அல்லது ஏற்கெனவே ஒருவருக்குள் கிறிஸ்து இருக்கலாம். ஆனால், அவருக்குள் இருக்கும் கிறிஸ்து பெருகுவதற்கு இன்னொரு சகோ தரர் ஒரு வாய்க்காலாக இருக்கலாம். நாம் ஒருவரோடொருவர் தொடர்புகொண்டு, உறவுகொண்டு, வாழ்வதின்மூலமாக கிறிஸ்து ஒருவருக்குள் ஒருவர் பெருகியிருக்கிறார். அந்த அளவுக்கு இந்த வாழ்க்கை மதிப்புள்ள வாழ்க்கை. பொதுவாக வேதத்துக்குப் புறம்பேயிருந்து மற்ற கவிஞர்கள் கூறு வதை நான் மேற்கோள் காட்டுவதில்லை. ஆனால், இந்தத் திருக்குறள் எனக்கு மிகவும் பிடிக்கும்.

> தக்கார் தகவிலார் என்பது அவரவர்
> எச்சத்தால் காணப் படும்

ஒரு மனிதனுடைய வாழ்க்கை முடிந்தபிறகு அவன் தக்கானா தகவிலனா என்பது, அவனுடைய வாழ்க்கை மதிப்புள்ளதா மதிப்பற்றதா என்பது, அவனுடைய எச்சத்தால் காணப்படும். அது அவன் தன் வாழ்க்கைக்குப்பின் எதை விட்டுச் சென்றிருக்கிறான் என்பதை வைத்துத் தீர்மானிக்கப்படும். என்னோடு தொடர்பு கொண்டவர்களுக்குள், என் சகோதர சகோதரருக்குள், என் பிள்ளைகளுக்குள், என் குடும்பத்தாருக்குள், என்னோடு வேலைபார்ப்பவருக்குள் நான் எந்த அளவுக்குக் கிறிஸ்துவை விட்டுச் சென்றிருக்கிறேன், கிறிஸ்துவை அவர்களுக்குள் எந்த அளவுக்குக் கூட்டிச் சேர்த்திருக் கிறேன் என்பதுதான் நான் தக்கானா தகவிலனா என்பதைத் தீர்மானிக்கும். இது ஒரு திருக்குறளாக இருந்தாலுங்கூட இந்த எண்ணம் மிக உயர்ந்த எண்ணம் என்று நான் கருதுகிறேன்.

## கிறிஸ்து மற்றவர்களுக்குள் பெருகுதல்

எனவே, மற்றவர்களைக்குறித்த கரிசனை நமக்கு இருக்க வேண்டும். ஆனால், சில சமயங்களில் இந்த ஆபத்து இருக்கிறது: “கிறிஸ்து எனக்குள் பெருகுவது. கிறிஸ்து எனக்குள் பெருகுவது. கிறிஸ்து எனக்குள் பெருகுவது.” இதில் நாம் மிகவும் மும்முரமாக இருந்துவிட்டு நம்மைச்சுற்றி தேவையோடு இருப்பவர்களை மறந்துவிடுகிறோம். அவர்களுடைய நிலைமைக்கு, அவர்களுடைய தேவைக்கு, அவர்களுடைய வாழ்க்கைக்குக் கிறிஸ்து தேவைப்படுகிறார். அது நம் கண்களில் படாமல் போகிற வாய்ப்பு இருக்கிறது. பொதுவாக நாம் இதில் சமநிலையைக் காத்துக்கொள்ள பிரயாசப்படுகிறோம். ஆனால், சில சமயங்களில் அது நேரிடுவதுண்டு. நாம் முதலாவது வாசித்த வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் எப்பாப்பிராவைக்குறித்துப் பேசுகிறார். இவன் உங்களுக்காகவும், லவோதிக்கேயருக்காகவும், எராப்போலியருக்காகவும், மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கிறான் என்று எழுதுகிறார். அவனுக்கு உங்களைக்குறித்த ஆழமான கரிசனை இருக்கிறது. நம்முடைய வாழ்க்கையில் குறுக்கிடுபவர்கள், நம்முடைய வாழ்க்கையில் வருபவர்கள், தொடர்பு கொள்ளுகிறவர்கள், நம்முடைய சகோதர சகோதரிகள் இவர்களைக் குறித்து நமக்கு என்ன இருக்க வேண்டுமாம்? ஆழமான கரிசனை.

## கரிசனையும், ஜெபமும்

தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்பார்த்து தேவன் கேட்ட முதல் கேள்வி: உன் சகோதரன் எங்கே? அதற்கு அவன் என்ன பதில் சொன்னான்: என் சகோதரனுக்கு நான் என்ன காவலாளியா? நீர் பார்த்துக்கொள்ள வேண்டியதுதானே. ஒருவேளை நாம் இப்படிக் கேட்காமல் போகலாம். ஆனால், நம்முடைய இன்றைய மனநிலைமையும், வளர்ச்சியும், முதிர்ச்சியும் எப்படி இருக்கலாமென்றால், “என் சகோதரனுக்கு நான் என்ன காவலாளியா?” உண்மை என்னவென்று கேட்டால் நாம் நம் சகோதரர்களுக்குக் காவலாளிகள்தான். ஆகவே, எப்பாப்பிரா உங்களுக்காக என்ன செய்கிறான்? அவன் தன் ஜெபங்களிலே உங்களுக்காகவும் போராடுகிறான். உழைப்பு, கடும் உழைப்பு எங்கே ஆரம்பிக்கிறது என்றால் நாம் நம் சகோதர சகோதரிகளுக்காக ஜெபிப்பதில் ஆரம்பிக்கிறது. தேவன் நம் சகோதர சகோதரிகளைக்குறித்த பாரத்தை நம் இருதயத்தில் வைக்கும்போது முதலாவது நாம் அவர்களுக்காக ஜெபிக்கிறோம். அவன் உங்களுக்காக ஊக்கமாகப் பிரயாசப்படுகிறான். இன்னொரு இடத்தில் அவன் உங்களுக்காக மல்யுத்தம் செய்கிறான் என்று எழுதப்பட்டிருக்கிறது. மல்யுத்தம் செய்வதென்றால் தேவனுடைய கைகளை முறுக்குவதில்லை. உண்மையாகவே நாம் நம் சகோதர சகோதரிகள்மேல் கரிசனை கொண்டிருந்தோமென்றால் ஜெபிக்க வேண்டும். ஜெபிப்பதென்றால் மல்யுத்தம் செய்வதற்குத் தேவையான சக்தி அதற்குத் தேவைப்படுகிறது. ஒரு பக்கம் ஜெபிப்பது நம் தகப்பனிடம் பேசுவதுபோல் எளிமையானது. ஆனால், மற்றவர்களுடைய நிலைமைக்காகவும், தேவைக்காகவும் ஜெபிப்பது என்பது ஏறக்குறைய மல்யுத்தம் செய்வதற்கு எவ்வளவு ஆற்றலும், உழைப்பும் தேவையோ அந்த அளவுக்கு ஆற்றலும், உழைப்பும் தேவை. “ஆண்டவரே, அவர்களுடைய இந்தக் குறைவை நிறைவாக்கும். அவர்களுடைய தேவையை நீர் பூர்த்திசெய்யும். அவர்களுடைய நிலைமைக்கு நீர் தேவை.” இது முதலாவது. இதை யார் செய்ய வேண்டும்.? நாமெல்லாரும் செய்ய வேண்டும். உடனே நாமெல்லாரும் ஒரு பட்டியல் தயாரித்துக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. குறைந்தபட்சம் ஒரு சில சகோதர சகோதரிகளைக் குறித்தாவது நம் இருதயத்தில் பாரம் இருக்க வேண்டும். ஓரிடத்தில் தீத்துவைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் இப்படி சாட்சி கொடுக்கிறார். தீத்துவின் இருதயத்தில் பாரத்தை அருளின தேவனுக்கு ஸ்தோத்திரம். ஒருவேளை எல்லா சகோதர சகோதரிகளையும் குறித்து நமக்குப் பாரம் இல்லாவிட்டாலும் குறைந்தபட்சம் எனக்கு இடது பக்கத்திலும் வலது பக்கத்திலும் இருக்கிற சகோதர சகோதரிகளைக் குறித்தாவது பாரம் இருக்க வேண்டும். இதிலும்கூட நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நமக்கு எந்த சகோதர சகோதரிகளைப் பிடிக்குமோ அவர்களைக் குறித்து மட்டும் பாரம் கொண்டிருப்பது. இது மாம்சத்தில் வருகிற ஒருவிதமான attachment. இது தேவன் தருகிற பாரம் இல்லை. இது முதலாவது. இதை நாம் எல்லாரும் செய்ய முடியும். நம்முடன் பள்ளியில் அல்லது கல்லூரியில் கூடப்படிக்கிறவர்களுக்காக ஜெபிக்கலாம்.

## முன்மாதிரியாக கிறிஸ்துவை வாழ்ந்து காட்டுதல்

இரண்டாவது, மற்றவர்களிடத்தில் நாம் ஒரு குறைவைப் பார்க்கிறோம் அல்லது ஒரு தேவையைப் பார்க்கிறோம். அவர்களுடைய நிலைமையில் அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றும். உடனே ஓடிப்போய், அவர்களுடைய குறைச்சலுக்காக பேசப் போகிறேன் அல்லது உதவிசெய்யப் போகிறேன், அவர்களுடைய தேவையை நான் நிறைவாக்கப்போகிறேன். அவர்

களுடைய குறைச்சலை நான் பூர்த்தியாக்கப்போகிறேன் என்று செய்ய வேண்டாம். நாம் கிறிஸ்துவை வாழ்வது நம் சகோதர சகோதரிகளுக்கு செய்கிற தலைசிறந்த சேவை.

தெசலோனிக்கேயருக்கு எழுதிய நிருபத்தில் நாம் அப்போஸ்தலனாகிய பவுலின் சாட்சியைப் படித்தோம். "நாங்கள் என்ன செய்தோம் என்றால் இரவும் பகலும் எங்கள் சொந்தக் கைகளினால் பிரயாசப்பட்டு உழைத்துச் சாப்பிட்டோம். கர்த்தரையும் சேவித்தோம், வேலையும் செய்தோம். எங்களுக்கும் எங்களோடு இருந்தவர்களுக்காகவும் நாங்கள் வேலை செய்தோம். நாங்கள் யாருக்கும் பாரமாயிருக்கவில்லை. நாங்கள் ஏன் அதைச் செய்தோம் என்றால் நாங்கள் உங்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருப்பதற்காக". அதுபோல 1 பேதுரு 5ஆம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்கிறார். "மந்தைக்கு மாதிரிகளாகக் கண்காணிப்புச் செய்யுங்கள்." உண்மையிலே முன்நடத்துவதென்றால், "சகோதரனே இந்த மேஜையை எடுத்துப்போடு. நீங்கள் இந்த நாற்காலிகளை எடுத்துப் போடுங்கள்," என்று கட்டளை கொடுப்பதில்லை. முதலாவது நம் வாழ்க்கை அவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பது. இதை ஒரு பெரிய பாரமாக எடுத்துக்கொள்ள வேண்டாம். "ஐயையோ.. போச்சா! இனி எல்லாவற்றிலும் நான் முன்மாதிரியாக இருக்க வேண்டுமா!" என்று ஒரு பதற்றத்துக்குள் சென்றுவிட வேண்டாம். "ஐயையோ.. முன்மாதிரியாக இருக்க வேண்டுமே.. முன்மாதிரியாக இருக்க வேண்டுமே". அப்படி ஒரு பதற்றத்துக்குள் சென்றுவிட வேண்டாம். ஆனால் நாம் இதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எந்த அளவுக்கு நாம் வாழ்க்கையில் கிறிஸ்துவை வாழ்கிறோமே அந்த அளவுக்கு நாம் சகோதரர்களை சேவிக்கிறோம். 2 கொரிந்தியர் 4ஆம் அதிகாரத்தைப் பற்றி நாம் அடிக்கடி பகிர்ந்துகொண்டிருக்கிறோம். "இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன் செய்கிறது." "கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்தில் விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்துதிரிகிறோம்" (வ. 10).

மற்ற சகோதர சகோதரிகளை நாம் சேவிக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையின் ஓர் இன்றியமையாத அம்சம் ஒருவரையொருவர் சேவிப்பது. ஒருவரையொருவர் சேவித்தல். இல்லையென்றால் நமக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்? இது மற்றவர்களைத் தாக்குவதற்காக அல்ல. ஞாயிற்றுக்கிழமை கூட்டத்துக்கு வருகிறோம். முன்னால் இருக்கிறவர்களுடைய தலையை மட்டும் பார்க்கிறோம். தலையைப் பார்த்துவிட்டு நாம் போய்விட்டால் அது ஒருவரையொருவர் சேவிப்பது அல்ல.

முதலாவது மற்றவர்களைப்பற்றிய கரிசனை, அதன் விளைவாக அவர்களுக்காக ஜெபிப்பது. இரண்டாவது, கூடுமானவரை, நான் அவனிடத்தில் போய் பேசுவதற்கோ அல்லது செய்வதற்கோ ஒன்றும் இல்லை. என் சகோதர சகோதரிகளுக்கு முன்பாக நான் கிறிஸ்துவை வாழ்வது. இதுவே பெரிய சேவைதான். அப்போஸ்தலனாகிய பவுல் தன் வாழ்க்கையையே தன் சேவையாக விட்டுப் போகிறார். அப்போஸ்தலர் 20ஆம் அதிகாரத்தில் அவர் எபேசுவில் உள்ள பரிசுத்தவான்களிடத்தில் பேசும்போது, "நான் மூன்று வருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லி கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்." "ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை." (20:31, 33) பண விவகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுலின் சாட்சி பயங்கரமாயிருக்கிறது. "நான் ஒருவனுடைய அப்பத்தையும் சாப்பிடவில்லை. நான் ஒருவனுடைய வஸ்திரத்தையும் வாங்கவில்லை. எனக்காகவும் என்னோடிருந்தவர்களுக்காகவும் என் சொந்தக் கைகளினால் நான் வேலை செய்தேன் என்று சொல்லுகிறார். ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும், காரையாவது, மோட்டார் சைக்கிளையாவது நான் இச்சிக்கவில்லை." அவர் தன் சாட்சியைப் பராமரிக்கிறார். நாம் இப்படிச் சொல்வதுண்டு: போரடிக்கிற மாட்டை வாய்கட்டாதிருப்பாயாக. ஆனால், பவுல் அதைத் தனக்குப் பிரயோகிக்கவில்லை. அதை அவர் மற்றவர்களுக்குத்தான் பிரயோகித்தார். "சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார். அப்படியிருந்தும், இவைகளில் ஒன்றையும் நான் அநுபவிக்கவில்லை. இப்படி நடக்க வேண்டுமென்று இவைகளை நான் எழுதுகிறதுமில்லை" (1 கொரி. 9:14, 15). இது அற்புதமானது. ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் நான் இச்சிக்கவில்லை. நான் கண்ணீரோடும், பாடுகளோடும் கர்த்தரைச் சேவித்தேன்.

### சரீரப்பிரகாரமான உதவி

மூன்றாவது, நாம் மற்றவர்களை சேவிக்கிற விதம். அவர்களுடைய சூழ்நிலையில் நாம் போய் அவர்களுக்கு உதவிசெய்வது. நம்மால் முடிந்த அளவுக்கு. நான் ஒரு புத்தகத்தில் இப்படி வாசித்தேன்.

ஒரு மகள் தன் அறையை மிகவும் ஒழுங்கீனமாக வைத்திருப்பாளாம். இப்போது அந்தத் தாய் தன் மகளுக்கு எப்படி சேவிப்பது? பல வகைகளில் சேவிக்கலாம். முதலாவது ஆழமான கரிசனை. “ஆண்டவரே தன் அறையை ஒழுங்காக வைக்க வேண்டும் என்ற எண்ணத்தை என் மகளுக்குத் தாரும். தன் புத்தகங்களை, தன் துணிகளை அந்தந்த இடத்தில் வைக்க வேண்டும் என்ற எண் ணத்தை அவளுக்குள் உருவாக்கும்,” என்று நாம் ஜெபிக்கலாம். அப்படிப்பட்ட எண்ணத்தைக் கொடுக்கிறவர்கூட யார்தான்? கர்த்தர்தான். பெரிய ஒலி பெருக்கியை வைத்து 365 நாட்களும் நாம் கூவினாலும்கூட அப்பேர்ப்பட்ட எண்ணம் அவளுக்குள் வராது.

எவ்வளவோ பேர் பேதுருவைப் பார்த்தார்கள். ஆனால், கர்த்தர் பேதுருவை திரும்பிப் பார்த்தார். பேதுரு வெளியே போய் மனங்கசந்து அழுதான். கர்த்தர் கண்டிப்பாக முறைத்துப் பார்த்திருக்கமாட் டார், கிண்டலாகப் பார்த்திருக்க மாட்டார், நக்கலாகப் பார்த்திருக்க மாட்டார். “தோற்றுவிட்டாய் பார்த்தாயா?” என்ற எண்ணம் வரும் வகையில் பார்த்திருக்க மாட்டார். “நான் அப்போதே சொன் னேனே, நினைவிருக்கிறதா,” என்ற தோரணையில் பார்த்திருக்க மாட்டார். ஒரு பார்வையில் இத் தனை சமிக்ஞைகளை அனுப்பிவிட முடியும். “யார் மறுதலித்தாலும் நான் மறுதலிக்கமாட்டேன் என்று சொன்னாயே? என்னவாயிற்று பார்த்தாயா?” பார்ப்பதற்குக்கூட கிருபை வேண்டும். எவ்வளவோ மக்கள் இயேசுகிறிஸ்துவைத் தொடுகிறார்கள். நெருக்குகிறார்கள். ஒரேவொரு பெண் போய் அவ ருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொடுகிறாள் உடனே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து திரும்பி, “யார் என்னைத் தொட்டது?” என்று கேட்டார். சீடர்களுக்கு இது மிகவும் நகைப்புக்குரியதாகத் தோன் றியது. எவ்வளவோ பேர் இவரை நெருக்கிக்கொண்டிருக்கிறார்கள். எல்லாரும்தான் தொடு ‘கிறார்கள். “யார் என்னைத் தொட்டது என்றால் என்ன கேள்வி இது?” எல்லாத் தொடுதலும் தொடு தல் அல்ல. நாம் கர்த்தரைத் தொடுகிற விதம் என்று ஒன்று இருக்கிறது. அதுபோல கர்த்தர் நம் மைத் தொடுகிற விதம் என்றும் ஒன்று இருக்கிறது.

அந்தத் தாய் என்ன செய்தாளாம்? அவளுடைய மகள் கல்லூரிக்குச் சென்றிருந்தபோது அவ ளுடைய அறைக்குச் சென்று அவளுடைய அறையைச் சுத்தம் செய்தாளாம். மகள் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது அதைப் பார்த்ததும் அது அவளைத் தொட்டுவிட்டது. ஏனென்றால் கல்லூரியில் பயங்கர அழுத்தம். ஆனால் வாலிபர்கள் தாங்கள் அழுத்தத்தில் இருப்பதை, தாங்கள் பலவீனமாக இருப் பதை ஒத்துக்கொள்ள அவர்களுடைய பந்தா அனுமதிக்காது. “தோல்வி எனக்கு இல்லை. பலவீனம் எனக்கு இல்லை. பயம் எனக்கு இல்லை,” என்ற பாவனையில் நெஞ்சை நிமிர்த்துக் கொண்டுதான் பொதுவாக இருப்பார்கள். கல்லூரியில் தங்களுக்கு அழுத்தம் இருக்கிறது என்று தங்கள் பெற்றோர் களிடம் சொல்வதற்குக்கூட அவர்களுக்கு மனம் வராது. ஆனால், வழக்கமாக ஒழுங்காக இருக்கிற அந்த மகள் அன்றைக்கு ஒழுங்காக இல்லாததால் அன்றைக்கு அந்தத் தாய் செய்யும் அந்த சேவை அவளுக்கு கிறிஸ்துவைப் பகர்ந்தளிக்கிறது.

கர்த்தராகிய இயேசு அப்படித்தான் பகிர்ந்தளித்தார். யோவான் 21ஆம் அதிகாரம் மிகவும் அற்புத மான அதிகாரம். சீடர்கள் கர்த்தரை விட்டுவிட்டு மீன்பிடிக்கச் சென்றுவிடுகிறார்கள். அன்று காலை யில் கர்த்தர் கடற்கரையில் அவர்களுக்காகக் காலைச் சிற்றுண்டி ஆயத்தம் செய்துவிட்டு அவர் களுக்காகக் காத்திருக்கிறார். 40 நாட்கள் கர்த்தர் பேதுருவைத் துரத்தினார். யாக்கோபு 14 வரு டங்கள் தன் மாமன் லாபானைச் சேவித்தான். 14 வருடங்கள் யாக்கோபு கர்த்தரைப் பின்பற்ற வில்லை. கர்த்தர் யாக்கோபைப் பின்பற்றினார். அதுபோல 40 நாட்கள் சீடர்கள் கர்த்தரைப் பின்பற்ற வில்லை. கர்த்தர் சீடர்களைப் பின்பற்றினார். அவர்கள் எங்கு போனாலும் அங்கு தோன்றுவார். அவர்கள் எம்மாவுக்குச் செல்லும்போது, “எங்கே போகிறீர்கள்?” என்று கேட்பதுபோல் அங்கு தோன்றுகிறார். அவர்கள் எம்மாவுக்குச் செல்லும்போது, “எங்கே போகிறீர்கள்?” என்று கேட்பது போல் அங்கு தோன்றுகிறார். ஆண்டவர் எப்போதும் உச்சாணிக் கொம்பில் இருந்துகொண்டு எல்லோரையும் தம்மிடம் வருமாறு கேட்பதில்லை.

நான் புதிய ஏற்பாட்டு ஆண்டவரை மட்டும் சொல்லவில்லை. அவர் பழைய ஏற்பாட்டிலும்கூட அப் படிச் செய்யவில்லை. ஆதாம் பாவம் செய்தவுடன் “சரி, ஆதாம் என்னிடம் வரட்டும், அவனை ஒரு கை பார்த்துவிடுவோம்,” என்று அவர் வரட்டுக் கௌரவத்துடன் இருக்கவில்லை. ஆதாம் இருக்கும் இடத்தை அவரே தேடிப் போகிறார். நான் சில ஆவிக்குரிய தலைவர்களைப் பார்த்திருக்கிறேன். “கர்த்தரே இடைப்பட்டு எப்படியாவது அவனைக் கொண்டுவருவார், சகோதரனே,” என்பார்கள். அதற்கு அவர்கள் மேற்கோள் வேறு காட்டுவார்கள். “பிதாவானவர் ஊதாரி மகனைத் தேடிப்போக வில்லை. அவன் மனந்திரும்பி வரட்டும் என்று அவர் காத்திருந்தார். பன்றி மட்டுமே தின்கிற தவிடு தின்கிற நாள் வரும். அப்போது மனந்திரும்பி வருவார்கள்,” என்று மேற்கோள் காட்டுவார்கள்.

ஏதோ பிதாவானவரை வில்லன்போல வருணிப்பது. பிதா காத்திருந்தது அவன் பன்றி மட்டுமே தின்கிற தவிட்டைத் தின்று அவன் தாழ்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக அல்ல. அவன் கையில் இன்னும் பணம் இருக்கிறது. இப்போது போனால் தன் கையிலிருக்கிற பணத்தைப் பிடுங்க அப்பா வந்துவிட்டாரோ என்று மகன் நினைத்துவிடக் கூடாது என்பதற்காக அவர் போகாமல் காத்திருக் கிறார். காசையும் கொடுத்துவிட்டு பின்னால் ஒற்றனையும் அனுப்பி விட்டார் என்று மகன் நினைத்து விடக் கூடாதே என்று தகப்பன் நினைக்கிறான். நான் உனக்குப் பணத்தைக் கொடுக்கும்போது உனக்கு முழுச் சுதந்தரம் இருக்கிறது. தன் தனிப்பட்ட சொந்த வாழ்க்கையில் தன் தகப்பன் வீணா கத் தலையிடுகிறார் என்று மகன் நினைத்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் அவர் தயங்கினாரே தவிர வேறொன்றும் இல்லை. “எங்கேயாவது அடி வாங்கட்டும். வீடு திருந்தாத பிள்ளையை ஊர் திருத்தும். தவிடு திங்கட்டும். அப்போது அவன் வருவான்,” என்று அவர் கூறவில்லை. நம்முடைய எண்ணங்களை பிதாவின் மனதின்மேல் திணித்துப் பார்ப்பது! பிதாவை நம் மட்டத்துக்கு இறக்கிவிடு கிறோம். நாம் பிதாவின் தளத்துக்கு உயர வேண்டும். சகோதரர் Wayne Jacobson இப்படிக் கூறு கிறார். இந்த உவமைக்கு நாம் கொடுத்திருக்கிற பெயர் ஊதாரி மகனின் கதை (parable of the prodigal son). அவர் சொல்லுகிறார். இந்த உவமையின் பிரதானமான கதாபாத்திரம் ஊதாரி மகன் அல்ல. இது ஊதாரி மகனின் கதை அல்ல, மாறாக வியக்கத்தக்க தகப்பனின் உவமை. Parable of the incredible Father.

பொதுவாக நாம் வேதாகமத்தை எப்போதும் தலைகீழாகத்தான் பார்ப்போம். ஏனென்றால் தொன்று தொட்டு நாம் அப்படித்தான் பார்த்துக்கொண்டு வருகிறோம். மற்றவர்களின் வாழ்க்கையையும் அப்படித்தான் பார்க்கிறோம். இது வியக்கத்தக்க பிதாவின் கதை. எப்படி இப்படி ஒரு தகப்பன் இருக்க முடியும்? “அடி வாங்கட்டும்” என்று நினைக்கிற தகப்பனாக இருந்திருந்தால் தன் மகன் தூரத்தில் வருவதைக் கண்டு ஓடிப்போய் அவனுடைய கழுத்தின்மேல் விழுந்து அவனுக்கு முத்தங் கொடுத்து...இந்தத் தகப்பன், “வாங்கட்டும் அடி, திங்கட்டும் தவிடு, கிழியட்டும் துணி, வரட்டும். அப்போதுதான் அவனுக்குப் புத்தி வரும், தாழ்மை வரும்,” என்று சொல்ல மாட்டான். இது நம் பிதாவானவர் யோசிக்கிற விதம் அல்ல. அந்த இளைய குமாரன் வந்தவுடன் பிதாவானவர் அவனை வேலைக்காரர்களின் வீட்டில் quarantine பண்ணவில்லை என்று சகரியா பூனன் கூறுவார். Quarantine என்றால் என்னவென்று தெரியுமா? வெளிநாட்டிலிருந்து சரக்குகள் வரும்போது, அவைகளை 2 அல்லது 3 மாதங்களுக்கு துறைமுகத்திலே வைப்பார்கள். அதில் ஏதாவது கிருமிகள் இருக்கிறதா இல்லையா என்ற பார்ப்பதற்காகப் பரிசோதிப்பார்கள். 2 அல்லது 3 மாதங்கள் வைத்திருந்து பார்த்து எந்தக் கிருமியும் இல்லையென்றால்தான் அவைகளை நாட்டுக்குள் அனுமதிப்பார்கள். கொஞ்சம் வெளியே இருக்கிற வீட்டில் வைத்துக் கண்காணிப்போம். உண்மையாகவே மனந்திரும்பி வந்திருக்கிறானா அல்லது இருக்கிற சொத்தில் இன்னும் பிடுங்க வந்திருக்கிறானா என்று பார்ப் போம் என்று அவர் சொல்லவில்லை. ஆண்டவர் அவர்களுக்குக் காலை சிற்றுண்டி ஆயத்தம் செய்கிறார்.

எலியாவின் நிகழ்ச்சியிலும் அதே விஷயம்தான். எலியாவிடம் நிறைய நேர்மறையான காரியங்கள் இருக்கின்றன. தேவன் அவைகளைப் பார்க்கிறார். அவனுடைய தைரியத்தைப் பார்க்கிறார். பாகா லுக்குமுன்பாக முழங்கால்படியிடாத ஆள் தான் ஒருவன்தான் என்று எலியா நினைக்கிறார். அவன் மனம் சோர்ந்து தூங்கும்போது கர்த்தருடைய தூதனானவர் வந்து அவனைத் தட்டியெழுப்பி சூடான அப்பமும், ஒரு கலசத்தில் தண்ணீரும் கொடுத்து...என்னை அதிகம் தொட்டது என்ன தெரியுமா? அவன் சாப்பிட்டுவிட்டு மறுபடியும் படுத்துக்கொண்டான். சில சமயம் நாம் செய்யவேண்டிய ஊழியம், அவனைத் தட்டியெழுப்பி, “நான் உனக்கு ஒரு வசனம் சொல்லுகிறேன். கேளேன்,” என்ப தல்ல. சில சமயம் நாம் செய்கிற ஊழியம் அவர்களை எழுப்பாமலிப்பதுதான். நல்லாத் தூங்கட் டும். சில சமயம் நாம் பிரசங்கம் பண்ணவேண்டாம், வசனம் சொல்ல வேண்டாம்.

அந்த மகள் கல்லூரியில் உள்ள அழுத்தத்தின் காரணமாக ஒரு மன அழுத்தத்தில் இருக்கக்கூடும்.

பேதுரு தன் வாழ்க்கையில் ஒரு transition மூலமாகச் செல்கிறார். “பெரிய மேசியா என்று நினைத் தோம். ஆனால், இவர் காணாமல் போய்விட்டாரே!” எலியா அழுத்தத்தில் இருக்கிறார். நமக்கு மற்றவர்களின் நிலைமை தெரியாது. மற்றவர்கள் என்ன நிலைமையில் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வதற்கான ஆவிக்குரிய உணர்வு நம்மிடம் அவ்வளவாக இல்லை. நமக்குத் தெரிந்த தெல்லாம் ஒன்றும் ஒன்றும் இரண்டு. எலியா படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கிறார். இப்போது என்ன

செய்ய வேண்டும்? “பயப்படாதே.” அவன் சரீரப்பிரகாரமாக, மனரீதியாக, உணர்ச்சிரீதியாக களைத் துப்போயிருக்கிறான், வற்றிப்போயிருக்கிறான்.

தேவன் மனிதனை ஆவி ஆத்துமா சரீரம் உடையவனாகப் படைத்திருக்கிறார். “காயமே இது பொய் யடா, காற்றடைத்த பையடா” என்ற தத்துவம் பேசுகிறவர் அல்ல நம் கர்த்தர். “என்னத்தை உண் போம், என்னத்தை குடிப்போம் என்று கவலைப்படாதிருங்கள்,” என்றுதான் நம் கர்த்தர் சொன்னாரே தவிர அதைப்பற்றித் தனக்கு எந்த அக்கறையும் இல்லை என்று கர்த்தர் சொல்லவில்லை. “இவைக ளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.” அதைப் பற்றிக் கவலைப்படாதிருங்கள் என்றுதான் சொன்னார். “நீங்களெல்லாம் ஒரு கிறிஸ்தவரா?” என்று கேட்க வேண்டாம். ஒரு சகோதரி தன் குடும்பத்தைச் சரியாக நடத்தவில்லையென்று உங்களுக்குத் தெரிந்தால் அவர்களுக்குக் கைலாகு கொடுங்கள். விமரிசனம் செய்யாதீர்கள். தோள் கொடுத்து உதவிசெய்யுங்கள். மோசே ஜெபித்தபோது அவனுடைய கைகள் தளர்ந்துபோனபோது ஊரும் ஆரோனும் அவனுக்குக் கைலாகு கொடுத்தார்கள். அவனுடைய கைகளைத் தாங்கிப்பிடித்தார்கள். பல சமயங்களில் நாம் மற்றவர்களை எப்படித்தான் சேவிக்க வேண்டும்? சரீரப்பிரகாரமாக முடிந்தால் உதவி செய்ய வேண்டும். இது மூன்றாவது.

முதலாவது, அவர்கள்மேல் ஆழமான கரிசனை கொள்ள வேண்டும். அதன்விளைவாக ஜெபிக்க வேண்டும். இரண்டாவது, நாம் அவர்களுக்குமுன்பாக கிறிஸ்துவை வாழ்வது. பண நெருக்கடியி னூடாய்ப் போய்க்கொண்டிருக்கிறவனுக்குமுன்பாக, “கவலைப்படாதே”...அவன்.ஃபீஸ் கட்டுவதற்கப் பணம் இல்லாமல் இருக்கக்கூடும். முன்மாதிரி என்றால் நான் அந்தச் சூழ்நிலையினூடாய்ச் சென் றிருக்க வேண்டும். 2 கொரி. 1:4 அற்புதமான வசனம்: “தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்.”

இரண்டாவது குறிப்பைப்பற்றிப் பேசும்போது இந்த வசனத்தை மேற்கோள் காட்டவேண்டும் என்று நான் நினைத்தேன். நாம் மற்றவர்களுக்கு எப்படி ஆறுதல் கொடுக்க முடியும்? நாம் தேவனால் எந்த அளவுக்கு ஆறுதல்படுத்தப்பட்டிருக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் நம்மால் மற்றவர் களுக்கு ஆறுதல் கொடுக்க முடியும். எனவே, பல சமயங்களில் தேவன் நம்மை அப்படிப்பட் சூழ்நிலை களில் வைப்பார். பண நெருக்கடியின் வழியாகப்போய் நான் தேவனை அந்தச் சூழ்நிலையில் அநு பவித்திருக்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். எந்தச் சூழ்நிலையும் சரி. நம்முடைய வருவாய்க்கு மிஞ்சி நாம் செலவழிக்க வேண்டாம். திருப்பிச் செலுத்துகிற திராணிக்கு மிஞ்சி நாம் கடன்வாங்க வேண்டாம். அப்படியாக நான் தேவனுடைய ஆறுதலை அநுபவித்திருக்கிறேன். எனவே, இன்னொரு சகோதரன் அந்தச் சூழ்நிலையில் இருக்கும்போது நான் எதுவும் சொல்லக்கூட வேண்டாம். அவர் ஒரு நெருக்கத்தில் இருக்கிறார். “சகோதரனே, எனக்கு இப்படிப் பட்ட ஒரு நெருக்கம் வந்தது. நான் கோட்பாட்டைக் கற்றுக்கொண்டேன். நம்முடைய வருவாய்க்கு மிஞ்சி நாம் செலவழிக்க வேண்டாம். திருப்பிச் செலுத்துகிற திராணிக்கு மிஞ்சி நாம் கடன் வாங்க வேண்டாம்.”

வீடு கட்டும்போதுகூட நான் இப்படி யோசித்ததுண்டு. எந்தக் கணத்திலும் அந்த வீட்டை விற்பதற்கு நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். இது கொஞ்சம் விநோதமாக இருக்கலாம். கர்த்தர் அந்த அள வுக்கு விட்டுவிடுவாரா? விடமாட்டார் அல்லது விடலாம். அது எனக்குப் பொருட்டல்ல. ஆனால், கோட்பாடு என்னவென்றால் நான் கடனிலே இந்த வீட்டைக் கட்டியிருப்பதால், ஒருவேளை கடனைத் திருப்பிச் செலுத்தமுடியாத பட்சத்தில், வீட்டைவிற்று கடனைத் திருப்பிச் செலுத்திவிட்டு இதுவரை வாழ்ந்ததுபோல மீதமுள்ள நாட்களையும் வாழ்வதற்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. இது இரண்டாவது, அந்தச் சூழ்நிலையில் நாம் வாழ்வதே நாம் சகோதரர்களுக்குச் செய்கிற ஊழி யம்தான். இன்னும் சொல்லப்போனால் சில முன்னோடிகளை தேவன் எழுப்புவார். ஒரு சிலரை மட் டும் அல்ல. நம் ஒவ்வொருவரையும் ஒரு காரியத்தில் முன்னோடியாக மாற்றுவார். இந்தச் சகோதரி தான் முன்னோடி. “ஒரேவொரு மனிதன் எல்லாவிதமான சூழ்நிலைகளின் வழியாகப் போய்விட்டார். இவர் ஒரு கலைக்களஞ்சியம்,” என்று யாரையும் தேவன் வைப்பதில்லை. ஒவ்வொருவரையும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையின் வழியாக நடத்தி அவர்களை மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய வைக் கிறார். மூன்றாவது நான் சொன்னது. நாம் அவர்களுடைய ஒரு பகுதியாக இருக்க வேண்டும். நாம் வெறுமனே பார்வையாளராக இருந்துகொண்டு, “பந்தை இப்படி அடி, அப்படி அடி, என்ன பந்து அடிக்கிற? கோல் இருக்கிற இடத்திற்குப் பந்தை அடிக்காமல் நீ என்ன இப்படி அடிக்கிற? தெற்கே அடி. வடக்கே அடிக்காதே,” இதுவல்ல. “கட்டப்பட்டிருக்கிறவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்

கள்போல அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்" (எபி. 13:3). சிறையில் இருக்கிறவர்களை நினைக்கும்போது நீங்களும் அவர்களோடே சிறையில் இருப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள். நாம் மற்றவர்களைச் சேவிக்க வேண்டுமானால் முதலாவது நாம் அவர்களுடன் cofeel பண்ணவேண்டும். நாம் அவர்களுடைய ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

**சுவிசேஷம் அறிவித்தல்**

நான்காவது, நாம் அவர்களுக்கு சுவிசேஷத்தைப்பற்றிய ஒரு உண்மையைச் சொல்ல வேண்டும். ஒருவேளை பாவத்தை மேற்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில் ஒரு சகோதரன் இருக்கிறான். அவரிடம் போய், "கிறிஸ்து உங்களுக்குள் ஜீவனாக இருக்கிறார்," என்று கூற வேண்டியிருக்கலாம். இந்த உண்மை அவரை விடுதலையாக்கும். நம்மால் மேற்கொள்ள முடியாது. ஆனால், கிறிஸ்து நம்மில் ஜீவனாக இருக்கிறார். கிறிஸ்து நம்மில் வளர வளர எல்லாவிதமான எதிர்மறையான காரியங்களையும் அவர் நம்மில் மேற்கொள்வார். இந்த உண்மை அவரை விடுதலையாக்கும். இல்லையென்றால் அவர்கள் பாவத்திலே சோர்ந்து போவார்கள், துவண்டு விடுவார்கள். நான்காவது நாம் மற்றவர்களைச் சேவிக்கிற விதம் சுவிசேஷத்தை அவர்களுக்குத் தெளிவாக அறிவிப்பது.

**பரிசுத்த ஆவியானவருடன் சேர்ந்து உழைத்தல்**

ஐந்தாவது, மிக முக்கியமானது. நாம் ஏற்கெனவே கேட்டதுபோல சுவிசேஷத்தை அறிவிப்பதென்றால் ஆதியாகமம் முதல் திருவெளிப்பாடு வரை வெளுத்துக்கட்டுவது இல்லை. ஒரு ஆள் கிடைத்தால் போதும். முதல் குறிப்பு, இரண்டாவது குறிப்பு, அப்புறம் உபகுறிப்பு 1, உபகுறிப்பு 2, உப குறிப்பு 3, அப்படியல்ல. இந்தச் சகோதரனுடைய அல்லது சகோதரியினுடைய இந்த மனிதனுடைய அல்லது மனுஷியினுடைய வாழ்க்கையில் தேவன் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று பகுத்துணர்ந்து பரிசுத்த ஆவியானவரோடு நாம் ஒத்துழைக்க வேண்டும். அதுதான் நாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வது. இதற்காகத்தான் அப்போஸ்தலர் நடபடிகள் 8 ஆம் அதிகாரத்தில் ஒரு பகுதியை வாசித்தோம். பிலிப்புவிடம் ஆவியானவர் சொல்லுகிறார். நீ போய், அந்த இரதத்தோடே சேர்ந்து கொள். இவர் இரதத்தோடே போய்ச் சேர்ந்து, "வாங்க, நான் உங்களுக்குச் சுவிசேஷம் சொல்லப் போகிறேன்," என்று ஆரம்பிக்கவில்லை. பிலிப்பு இரதத்தோடே போய் சேர்ந்துகொண்டால் அங்கே என்ன நடக்கிறது? கந்தாகே நாட்டு மந்திரி ஏற்கெனவே ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்திலிருந்து இன்று நாம் சொல்லுகிற 53ம் அதிகாரத்தை வாசித்துக்கொண்டிருக்கிறார். "அவர் ஒரு ஆட்டைப் போல அடிக்கப்படுகிறதற்குக் கொண்டுபோகப்பட்டடார். மயிர் கத்திரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வயைத் திறவாதிருந்தார்." (8:32) அவருடைய இருதயத்தில் ஏற்கெனவே ஒரு வேலை நடந்துகொண்டிருக்கிறது. பிலிப்பு அங்கு போய்ச் சேர்ந்தவுடனே, மந்திரி அவரிடம் "தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக் குறித்தோ? வேறொருவரைக் குறித்தோ?" ஏற்கெனவே பரிசுத்த ஆவியானவர் இருதயத்தை, வாழ்க்கையை, உழுதுகொண்டிருக்கிறார். இப்போது பிலிப்பு போய் என்ன செய்கிறார்? விதைக் கிறார். ஏற்கெனவே பரிசுத்த ஆவியானவர் உழுதுபோடுகிற வேலையைச் செய்யவில்லையென்றால் நான் போய் ஒரு கடப்பாறையைக் கொண்டு ஒரு குத்து குத்தி, பரிசுத்த ஆவியானவர் அதற்குமேல் எந்த வேலையும் செய்யாதபடிக்கு உடைத்துவிடுவோம்.

ரிக் வாரன் என்ற ஆசிரியர் "நோக்கம் நிறைந்த வாழ்க்கை" என்ற புத்தகத்தில் பரிசுத்த ஆவியானவரோடு சேர்ந்து சில்லிவைத்தல் என்று கூறுகிறார். சில்லி வைத்தல் என்றால் அலையும் ஆளும் சேர்ந்து செல்வது. அலை வருவதற்கு முந்தியும் குதிக்கக் கூடாது. அலை போனபிறகும் குதிக்கக் கூடாது. அலையோடு சேர்ந்து செல்ல வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நம் அயலகத்தாரின் வாழ்க்கையில் கிரியைசெய்து கொண்டிருப்பார். நம்மோடு வேலைசெய்பவர்களின் வாழ்க்கையில் வேலைசெய்து கொண்டிருப்பார். ஆனால், நமக்குத் தெரியாமல் போய்விடும். ஏனென்றால் முதல் குறிப்பு வர வேண்டும். மற்றவர்கள்மேல் ஆழ்ந்த கரிசனையும், அதன்விளைவாக ஜெபமும் வேண்டும்.

ஒரு சகோதரி உள்ளே வந்தார்கள். "வணக்கம் சார்" என்றார்கள். "எனக்கு எப்போது வகுப்பு, முதல் வகுப்பா, இரண்டாவது வகுப்பா?" நான் அவர்களைப் பார்த்து, "அழுதீர்களா?" என்று கேட்டேன். நான் தீர்க்கதரிசி இல்லை. அழுகிற 99 பேரைப் பார்த்து நான் கேட்பதே கிடையாது. இப்போது தான் மற்றவர்களைக்குறித்து கொஞ்சம் கரிசனையோடு இருக்க வேண்டும் என்ற எண்ணமே தோன்றியிருக்கிறது. "என்னைப் பார்த்தால் அப்படித் தெரிகிறதா?" சிலர் உள்ளாக அழுதுகொண்டிருக்கக்கூடும். நாம் தமாஷ் பண்ணுவதிலேயே மும்முரமாக இருப்போம். ஒருநாள் சூனேமியாள்

வந்து எலிசாவின்முன் விழுந்து அவனுடைய காலைப் பிடித்துக்கொண்டாள். "அப்பொழுது கேயாசி அவளை விலக்கிவிட வந்தான். தேவனுடைய மனுஷன், "அவளைத் தடுக்காதே, அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது. கர்த்தர் அதை எனக்கு அறிவியாமல் மறைத்து வைத்தார்," என்றார். "அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது. கர்த்தர் அதை எனக்கு அறிவியாமல் மறைத்து வைத்தார்," என்றார் (2 ராஜா. 4:27). இதில் எந்தத் தந்திரமும் கிடையாது. "ஆண்டவரே எனக்குத் தீர்க்கதரிசன வரத்தைத் தாரும்." நான் சாப்பிடுவேன், தூங்குவேன். ஆனால், யாரைப் பார்த்தாலும் அவர்களுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்று நான் சொல்ல வேண்டும். அப்படியல்ல. அப்படி மலிவாக தேவன் எதையும் தரமாட்டார். உண்மையான கரிசனை இருக்க வேண்டும். "ஆண்டவரே என் சகோதரனுக்காக உம்மிடத்தில் வந்து நிற்கிறேன். அவனுடைய எதிர்காலத்துக்காக வருகிறேன்." ஒரு சகோதரன் அல்லது சகோதரியின்மேல் உண்மையான கரிசனை கொள்ளும்போதுதான் தேவன் நமக்கு உணர்வைத் தருவார். பரிசுத்த ஆவியானவர் கிழக்கில் வேலை செய்துகொண்டிருக்கும் போது நாம் வடக்கில் வேலை செய்யக்கூடாது. ஒருவன் தன் எதிர்காலத்தைக்குறித்து கொஞ்சம் கவலையோடு இருக்கக்கூடும். அப்போதுதான் நாம், "தேவன் மூவர் ஒருவர், அவர் மூவொருவர், மூவராக இருந்தும் ஒருவராக இருக்கிறார். ஒருவராக இருக்கிறார். ஆனால் மூவர்," என்று பேசிக் கொண்டிருப்போம். நாம் சத்தியத்தை பேசிக்கொண்டிருப்போம். "அதைப்பற்றியெல்லாம் கவலைப் படாதீர்கள். சகோதரனே." அப்படியல்ல. இரதத்தோடே சேர்ந்துகொள், இது மிகவும் அற்புதமானது. பரிசுத்த ஆவியானவருடைய நடத்துதலைப் பின்பற்றுவது.

### சரிசெய்தல்

கடைசியாக ஒரு விஷயம். சில சமயங்களில் நாம் ஒரு சகோதரனையோ அல்லது ஒரு சகோதரி யையோ சரிசெய்ய வேண்டியிருக்கலாம். நான் சொல்லுகிறேன் சில சமங்களில். அது சகோதரனுக் கும் எனக்கும் உள்ள உறவைப் பொறுத்தது. "நீங்கள் இன்று வேதாகமத்தை வாசித்தீர்களா என்று தினமும் என்னிடம் கேளுங்கள்," என்று நான் ஒரு சகோதரனிடம் சொல்லுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். நான் மனமுவந்து அந்தப் பொறுப்பை அவருக்குக் கொடுக்கிறேன். அவர் கேட்பார் என்பதற்காக நான் வாசிப்பேன். இப்படி 21 நாட்களுக்கு நான் தொடர்ந்து வாசித்துவிட்டால் நம் முடைய பழக்கமாக மாறிவிடும். நான் சொன்னதால் அவர் என்னிடம் கேட்கிறார். அது உறவைப் பொறுத்தது. இன்னொன்று தகப்பனுக்கும் மகனுக்கும் உள்ள உறவைப் பொறுத்தது. இது ஆழமான உறவு. ஒரு தகப்பன் தன் பிள்ளையை நடத்துவதுபோல் சபையிலுள்ள எல்லாச் சகோதர சகோதரி களையும் நடத்த முடியாது. தகப்பன் தன் மகனிடம், "நீ ஆறு மணிக்கு எழுந்திருக்க வேண்டும்." என்று சொல்லலாம். ஆனால், வளர்ந்தபிறகு அதுகூடச் சொல்ல முடியாது. ஒருவனுடைய தனித் துவத்தை தேவன் மதிக்கிறார். சரி செய்யலாம். ஆனால், அது நம்முடைய உறவைப் பொறுத்தது. நான் முன்னே சொன்ன எல்லாக் காரியங்களையும் செய்திருந்தால் இந்தக் காரியத்தைச் செய்ய லாம். தேவனுடைய நேர்த்தியான குடும்பம் என்ற முறையில் நாம் வாழும்போது இவைகளெல்லாம் நம் வாழ்க்கையில் காணப்படும்.

ஒன்று, மற்றவர்கள் மேலுள்ள கரிசனையும், ஜெபமும். இன்னொரு வசனம்கூட இருக்கிறது. "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (பிலிப்பியர் 2:4). இரண் டாவது, தேவன் நமக்கு அமைத்திருக்கும் சூழ்நிலையில் கிறிஸ்துவை வாழ்வது. அதை ஓர் ஊழிய மாக தேவன் மற்றவர்களுக்குப் பயன்படுத்துவார். மற்றவர்களை ஆறுதல்படுத்த... அது நோய்வாய்ப் பட்ட சூழ்நிலையாக இருக்கலாம். பண நெருக்கடியான சூழ்நிலையாக இருக்கலாம். மற்றவர்களால் துன்பப்படுத்தப்படுகிற சூழ்நிலையாக இருக்கலாம். மூன்றாவது, பிறருடைய சூழ்நிலையில் நாம் ஒரு பங்காக, பகுதியாக இருப்பது. அவர்கள் இரண்டு சின்னப்பிள்ளை வைத்துக்கொண்டு கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கக் கூடும். அப்போது நாம், "அவர்களுடைய வீட்டைப் பாருங்கள். ஒழுங்காக இருக்கிறதா? எல்லாம் சிதறிக் கிடக்கிறது?" என்று சொல்வோம். என்ன செய்ய வேண்டும்? வாரத் தில் இரண்டுமுறை அவர்களுடைய வீட்டுக்குச் சென்று அவர்களுடைய குழந்தையை நாம் வைத்துக் கொண்டால் அவர்கள் தங்கள் வீட்டை ஒழுங்காக வைத்துக்கொள்ள முடியும். அவர்களுடைய சூழ் நிலையில் ஒரு பங்காக மாற வேண்டும். நான்காவது, பல சமயங்களில் சத்தியத்தைக் கொடுப்பது மட்டுமே வழி. கடைசியாக, நாம் சத்தியத்தைக கொடுத்துத்தான் ஆக வேண்டும். கிறிஸ்துவைக் காண்பிக்க வேண்டும். தேவனுடைய திட்டத்தைச் சொல்ல வேண்டும். ஐந்தாவது, பரிசுத்த ஆவி யானவர் ஒருவனுடைய வாழ்க்கையில் என்ன வேலை செய்துகொண்டிருக்கிறாரோ அந்த வேலை யோடு நாம் சேர்ந்துகொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவரோடு இசைந்துதான் நாம் மற்றவர் களைச் சேவிக்க முடியுமேதவிர வேறு வழிகளில் சேவிக்க முடியாது. "நான் ஏற்கெனவே 1 வருட வேதாகமப் பயிற்சியைப்பற்றிய திட்டம் வைத்திருக்கிறேன்," என்னுடைய திட்டத்துக்கு இசைவாய்ப்

பொருந்திவருமாறு நான் பரிசுத்த ஆவியானவருடைய கையை முறுக்கக் கூடாது. இது வேலை செய்யாது. அவர் கர்த்தர். அவர் இறையாண்மையுள்ளவர். கடைசியாக, இது மிகவும் அபூர்வம். சகோதரனுக்கும் எனக்கும் உள்ள உறவைப் பொறுத்து, உறவின் நெருக்கத்தைப் பொறுத்து ஒருவரையொருவர் சரி செய்யலாம். "நீங்கள் 10 இலட்சம் ரூபாய்க்குமேல் வீடு கட்டா தீர்கள். அது உங்களுடைய வருமானத்துக்கு அதிகம். பின்னர் அது உங்களுக்குக் கண்ணியாக இருக்கக்கூடும். அதைக்குறித்து கவனமாக இருங்கள்."

**அப்பிரயோஜனமான ஊழியக்காரன்**

கடைசியாக, ஒன்று சொல்லுகிறேன். இப்படியெல்லாம் சேவிப்பதற்கு நாம் நம் பிரயாசத்தையும், நேரத்தையும், உழைப்பையும் செலவழிப்போம். செலவழித்தபிறகு நமக்கு ஓர் எண்ணம் வரும் "இவர்கள் நமக்குக் கடன்பட்டவர்கள். இவர்கள் எடுக்கும் எல்லாத் தீர்மானங்களிலும் இவர்கள் என் னைக் கலந்தாலோசிக்க வேண்டும்." இது ஒரு கண்ணி. இவையெல்லாவற்றையும் செய்தபிறகு நாம், "நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரன். செய்ய வேண்டியதை மாத்திரம் செய்தோம்," என்று சொல்ல வேண்டும். "சகோதரியே, நாங்கள் உங்களுக்காக ஜெபம் பண்ணிக்கொண்டேயிருக் கிறோம்" என்றால் என்ன பொருள். "நீங்கள் எனக்குக் கடன்பட்டவர்கள்" என்று மறைமுகமாச் சொல்லுகிறோம். "சகோதரியே உங்களுடைய மகள் திருமணத்துக்காக நான் ஜெபித்துக் கொண் டிருக்கிறேன்" என்றால் என்ன பொருள்? "நீங்கள் எனக்குக் கடன்பட்டவர்கள்" என்று மறைமுகமாகச் சொல்லுகிறோம். "நாளைக்குக் கல்யாணம் நடக்கும்போது நன்றி கூறும்போது என் பெயரைச் சேர்த்துக்கொள்ள மறக்க வேண்டாம்," என்று பொருள். இன்னும் ஒரு படி மேலேபோய் சாட்சி சொல்வது, "தேவனுடைய தாசன் ஜெபித்தார். என்னுடைய மகளுக்குக் கல்யாணம் நடந்துவிட்டது. எனவே இனிமேல் யார்யாருடைய மகளுக்கெல்லாம் கல்யாணம் நடக்க வேண்டுமோ யாரிடம் போய் ஜெபம் பண்ணுங்கள். தேவனுடைய தாசனிடம்." இல்லை. நிச்சயமாக இல்லை.

பரிசுத்த ஆவியானவர் எப்போதும் திரைக்குப்பின்தான் வேலை செய்வார். மெல்கிசதேக்கின் ஊழி யம் என்று ஓர் ஊழியம் இருக்கிறது. அது என்னவென்று கேட்டால், ஆபிரகாம் சண்டை போட்டு களைத்து வருகிறார். சாலேமின் ராஜாவாகிய மெல்கிசதேக், தந்தையும் தாயும் வம்ச வரலாறும் இல்லாதவன். நாட்களின் தொடக்கமும் ஜீவனின் முடிவும் இல்லாதவன். எங்கிருந்தோ வந்தான். அவருக்கு அப்பமும் திராட்சை ரசமும் கொடுத்துவிட்டு வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய பெயரில் அவரை ஆசீர்வதித்துவிட்டுப் போய்விட்டார். நம்முடைய சகோ தரர்களுடைய தேவைக்கு, குறைச்சலுக்கு, நெருக்கத்துக்கு நாம் அங்கிருக்க வேண்டும். மகிமை கொடுக்கிற நேரத்தில் நாம் அங்கு நிற்கக் கூடாது. நாம் காணாமல் போய்விடவேண்டும். இது பரிசுத்த ஆவியானவருடைய தன்மை. அவருடைய நெருக்கத்திலே நான் அங்கிருந்து ஊழியம் செய்தேன் என்பதற்காக மகிமை கிடைக்கிற நேரத்தில் நாம் அங்கு இருக்கக் கூடாது. அதற்குமேல் ஒரு படி மேலேபோய், "அவர் என்னுடைய ஆலோசனையைக் கேட்காமல் இன்னொருவருடைய ஆலோசனையைக் கேட்டதால் நான் அவருக்காக ஜெபிக்க மாட்டேன். அவருக்காக வாழ மாட்டேன். அவருடைய சூழ்நிலையில் பங்குபெற மாட்டேன். அவருக்கு நான் சத்தியத்தைச் சொல்ல மாட்டேன். பரிசுத்த ஆவியானவர் அவருடைய வாழ்க்கையில் வேலைசெய்யும்போது என்னுடைய பங்கை நான் செய்ய மாட்டேன்." அப்படியல்ல, வியக்கத்தக்க பிதாவின் உவமையை மனதில் கொள்ளுங்கள். "தேவன் இதைச் செய்யச் சொன்னார். நான் செய்தேன்" வாழ்நாளெல்லாம் நாம் யார் மேலும் எந்த சீட்டையும் தொங்கப் போட வேண்டாம். இப்படிப்பட்ட நோக்கம் அசுத்தமானது. இது தேவனுக்கு மகிமையைத் தராது. அசுத்தமான, தூய்மையற்ற உள்நோக்கத்தோட நாம் நம் சகோதர சகோ தரிகளைச் சேவித்தால் அதைத் தேவன் கனப்படுத்த மாட்டார்.

என்னுடைய வாழ்க்கையின் ஒரு பகுதி மற்றவர்களுக்குரியது. என் பணத்தின் ஒரு பகுதி மற்ற வர்களுக்குரியது. என் உழைப்பின் ஒரு பகுதி மற்றவர்களுக்குரியது. உண்மையுள்ள உக்கிராணக் காரன் என்ற முறையில் அந்தப் பங்கை நான் என் சகோதர சகோதரிகளுக்குக் கொடுத் தாக வேண்டும். அவர்கள் அதை எனக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. பிலிப்பியர் 4ஆம் அதிகாரத்தில் பவுல் இப்படிக் கூறுகிறார்: நான் தெசலோனிக்கேயிலிருந்த போதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொரு தரம் அனுப்பினீர்கள் (வ. 16). கொரிந் தியர்களுக்கு ஊழியம் செய்யும்போது கொரிந்தியர்கள் உதவி செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. நான் ஒரு சகோதரனுக்கு ஊழியம் செய்யும்போது அவர் எனக்கு திருப்பிச்செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருக்கிறீர்கள். நானும் உங்களிடத்தில் அன்பாயிருக்கிறேன். நான் வரும்போது

நீங்கள் கா.்.பி தருகிறீர்கள். நீங்கள் வரும்போது நான் கா.்.பி தருகிறேன். ஒருவேளை மற்றவர்கள் திருப்பித்தர மாட்டார்கள். திருப்பித்தர அவர்களிடம் வசதி இல்லாமல் போகலாம் அல்லது மனம் இல்லாமல் போகலாம் அல்லது அவர்கள் வளர்ந்த விதம் அப்படி இருக்கலாம். அது பிரச்சினையே இல்லை. எங்கேயோ இருக்கிற பிலிப்பியரைக்கொண்டு தேவன் நம் தேவைகளைச் சந்திப்பார். அப்படிச் சந்திக்காவிட்டாலும் நாம் தொடர்ந்து மனரம்மியமாய் மற்றவர்களை சேவிப்போம். அப்படி சேவிப்பதால் மற்றவர்கள் நமக்கு அடிமைகள் இல்லை. தேவன் நம்மிடையே இப்பேர்ப்பட்ட சேவையை ஏற்படுத்துவாராக.